# மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 173/2020** **நாள். 06.02.2023**

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சந்திரசேகரன் | சாதி | |
| கிராமம் | செஞ்சி(என்.ஆர்.பேட்டை) | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 49 |

**ம..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-1ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.1 - செஞ்சி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ.2 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு ஆவணம் சான்றிட்ட நகல்.
3. ம.த.சா.ஆ.3 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டு ஆவணம் சான்றிட்ட நகல்.
4. ம.த.சா.ஆ.4 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல்.
5. ம.த.சா.ஆ.5 - விபத்தில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் பிரேதயபரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல்.
6. ம.த.சா.ஆ.6 - விபத்தில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

**7.**ம.த.சா.ஆ.7 - விபத்தில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

8.ம.த.சா.ஆ.8 - விபத்தில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் பள்ளி கல்வி சான்றிதழ் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**